ISSN:2582-9599

# நிகண்டுகள்

**முனைவர் கி சத்யா**
**அகவல் மின்னிதழ் ஆசிரியர்**

9

**ஆய்வுச்சுருக்கம் :**

நிகண்டு என்பது சொற்களுக்கான பொருள்களைத் தருவதற்காக ஆக்கப்பட்ட நூல் வகையாகும்தமிழில் . இந்நூல்கள் முற்காலத்தில் உரிச்சொல் பனுவல் .முன்னோடியாக இருந்தவை நிகண்டுகள் அகராதிகளுக்கு ஆயினும் நிகண்டு என்னும் சொல் வடமொழி என்ற கருதும் உள் .என்ற பெயரால் அழைக்கப்பட்டனளது . நிகண்டுகள் செய்யுள் . நிகண்டு என்னும் நூல் வகைக்கு முன்னோடி போல் அடைந்தது தொல்காப்பியம் நிகண்டுகளின் வளர்ச்சிப் பாதையில் பலச்சொற்களைத் திரட்டித் தரும் பாங்கினைக் .மைந்தவைவடிவில் அ

இதில் கற்போருக்கு அறிவுறுத்தவும்.இணைத்துக் கொண்டுள்ளன, வாழ்கைக்குப் பயன்படவும், பயன்பாட்டினுடே புரிந்து கொள்ளவும் இயம்பபப்பட்டதே நிகண்டுகளாக இருந்து மக்களின் அறிவை பெருக்கி தக்க பொருளைக் கண்டறிய உதவுகிறது.

**முன்னுரை:**

தமிழில் தோன்றிய கருவி நூல்களாகிய நிகண்டுகள் என்பவையே , அகரமுதலி களுக்கு ( அகராதி ) ஆதார நூல்களாக அமைந்த ுள்ளனஇந்திய மொழிகள் சிலவற்றிள் அகராதி வடிவில் செய்யப்பெற்ற . தமிழ் .னினும் செய்யுள் வடிவில் இயற்றப் பெற்றனவே .நூல்களும் நிகண்டுகள் எனும் பெயர்பெற்றன

மொழி மட்டுமின்றி மருத்துவம், சோதிடம் போன்ற துறைகளிலும் நிகண்டுகள் தோன்றியுள்ளனசெய்யுள் . வடிவில் அமைந்துள்ள நிகண்டுகள், அகராதிகள் தோன்றுவதற்கு முன் தமிழ்ச்சொற்களின் பொருள்களை அறிந்துக் கொள்வதற்குப் பயன்பட்டவையாகும்இக்கட்டுரையில் நிகண்டு சொல் விளக்கம் கூற்றுகள் ., வித்தியாசம் ,பிரிவுகள் ,தொகுப்பு , திவாகர நிகண்டு , தொல்காப்பியத்தில் நிகண்டுகள் போன்ற தலைப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

**நிகண்டு சொல் விளக்கம்:**

நிகண்டு என்னும் சொல் தொகை ,தொகுப்பு , கூட்டம் என்னும் பொருள் தரும்நிகண்டு எனப்படுவது .

நிகரண்டு = அண்டு + அதாவது நிகர் .தமிழ்ச்சொல்>நிகண்டு .நிகரான சொற்கள் அண்டிக் கிடப்பவை .

நிகர் என்னும் சொல்லைத் தொல்காப்பியம் பெயர் சொல்லாகவும் , வினைச்சொல்லாகவும் பயன்படுத்துகிறது = அண்டவாதி+ சங்கப் பாடல்களில் வரும் நிகர்மலர் என்பது வினைத்தொகை நிகர் . .நிகரண்டவாதி என்பதைக் குறிக்கும்

பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே அறிய தமிழ்ச் சொற்களின் பொருளை அறிய நிகண்டு நிகண்டு நூல்கள் தோன்றினநோக்கில் பாடல்களில் சொற்கள் பொருள் .இவை பாடல்களாக உள்ளன . பாடல்களின் அடிகள் பொதுவாக எதுகைத் .பாகுபடுத்தப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன . தொடையாக அமைவது வழக்கமாகும்

நிகண்டு பதிப்பித்தோருள் வையாபுரிப்பிள்ளை முதலிய மிகச் சிலரே சரியான பதிப்பு நியதிகளைப் பின்பற்றியுள்ளனர் .

ஒரு பொருள் குறித்த பல சொற்களும் , பல பொருள் குறித்த ஒரு சொல்லும் கொண்ட அகராதிகள் தமிழில் முற்காலத்தில் உண்டு .அவை நிகண்டுகள் எனப்பட்டன .

நிகண்டு , கூட்டம் என்பதைக் குறித்தாலும் , சொற்கள் தொகுதியாக இருப்பதாலும் நீளமான வரிசையில் கொடுக்கப்பட்டிருப்பதாலும் அகராதி துறை நூல்களுக்கு நிகண்டு என்ற பெயர் வந்தது .

**நிகண்டு பற்றிய கூற்றுகள்:**

* வடமொழி நீருக்கத்தின் மூன்று காண்டங்களில் நைகண்டுகம் ), நைகம் ,தைவம் நைகண்டுகம் (

. என்பதே நிகண்டாகும் - மு அருணாசலம் .

* யாப்பு நெறியில் சொற்பொருள் கூறும் தமிழ் நூல்கள் நிகண்டு என்னும் பொதுப்பெயரால் வழங்கப்படுகின்றன. - வ ஜெயதேவன் .

* வடமொழி வேதத்திற்கு பொருள் சொல்லும் நூலின் பெயர் என்றும்,பின் சொற்பொருள் உணர்த்தும் நூல்கட்கெல்லாம் இப்பெயர் ஏற்பட்டது. - எஸ் வையாபுரி .

* சொற்கள் நீளத் தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும், பட்டியல் போல நீளத்தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் நூல் நிகண்டு. - சுந்தரசண்முகனார்

**அகராதிக்கும் நிகண்டுக்கும் உள்ள வித்தியாசம்:**

அகராதி என்பது ஒரு சொல்லுக்கான பொருளைத் தருவது அது அகர வரிசையிற் தரப்பட்டிருக்கும் . இங்கே பொருள் என்பது இன்னொரு மொழியிலும் கூடத் தரப்பட்டிருக்கலாம் .

நிகண்டு என்பது ஒரு சொல்லுக்கான பல இணைச்சொற்களையும், சில சமயங்களில் எதிர்ச் சொற்களையும் கூடத் தருவது சில சமயங்களில் அது அகரவரிசைப்படியும் ., சில சமயங்களில் கருப்பொருள்கள் ஒரு திரளாகவும் கூட அமையலாம் .

அதாவது ,

நிகண்டுகள் அகராதி அமைப்புடையன அல்லஒரு .பலவகைப் பொருட்புல வகைப்பாடு உடையன . பொருட் பல சொற்கள் அனைத்தும் பொருட் புல அடிப்படையில் திரட்டடப்பட்டுள்ளன .

நிகண்டு பிரிவுகள் :

நிகண்டுகள் செய்யுள் வடிவத்தில் அமைத்து இருக்கும் அவற்றில் ஒரு பொருட் பல்பெயர் ., ஒருசொற் பல்பொருள் , தொகைப்பெயர்என்னும் மூன்று பிரிவுகள் உண்டுஅவை பெரும்பாலும் நூற்பாவி .னால் அமைந்தவைவெண்பா ., ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம் விருத்தம், கட்டளைக் கலித்துறை போன்ற பிற பாவகைகளினால் அமைந்த நிகண்டுகளும் உண்டு.

**நிகண்டுகளும் அதன் ஆசிரியர்களும்**

| வஎண். | நிகண்டு | ஆசிரியர் |
|---|---|---|
| 1. | திவாகரம் | திவாகர முனிவர் |
| 2. | பிங்கலந்தை | பிங்கல முனிவர் |
| 3. | அகராதி நிகண்டு | இரேவணர் |
| 4. | பொதிகை நிகண்டு | சாமிநாத கவிராயர் |
| 5. | சூடாமணி நிகண்டு | மண்டல புருடர் |
| 6. | உரிச்சொல் மற்றும் கயாதர நிகண்டு | காங்கேயர் |
| 7. | நாணார்த்ததீபிகை | முத்துச்சாமி பிள்ளை |
| 8. | அரும்பொருள் விளக்க நிகண்டு | அருமருந்து தேசிகர் |
| 9. | சூளாமணி நிகண்டு | ஈஸ்வர பாரதியார் |

| | | |
|---|---|---|
| 10. | ஆசிரிய நிகண்டு | ஆண்டிப்புலவர் |
| 11. | பொருட்டொகை நிகண்டு | சுப்பிரமணிய பாரதி |
| 12. | உசித சூடாமணி நிகண்டு | சிதம்பர கவிராயர் |
| 13. | கந்தசுவாமி நிகண்டு | சுப்பிரமணிய தேசிகர் |
| 14. | பிடவ நிகண்டு | ஔவையார் |
| 15. | ஒரு சொல்பல பொருள் நிகண்டு | கனகசபைப் புலவர் |
| 16. | நைடதம் | அதிவீரராம பாண்டியன் |
| 17. | கூடமலை நிகண்டு | ஈஸ்வர கவி |
| 18. | பாரதி நிகண்டு | பரமானந்த பாரதி |
| 19. | சிந்தாமணி நிகண்டு | வைத்தியலிங்கம் பிள்ளை |
| 20. | விரிவு நிகண்டு | அருணாச்சல நாவலர் |
| 21. | அபிதானத் தனிச் செய்யுள் நிகண்டு | கோபாலசாமி நாயக்கர் |

**நிகண்டுகளின் தொகுப்பு முறை**

நிகண்டுகளில் பழமையானது திவாகர நிகண்டுஇது இக்கால அகராதி போலச் சொற்களை . அகரவரிசையில் அடுக்கி வைத்துக்கொண்டு சொற்களை விளக்கும் வேறு சொற்களைத் தொகுத்துத் சொற்களை அடுக்கும் போது முத இதற்குப் பின்னர் தோன்றிய நிகண்டுகள் .தருகிறதுலெழுத்தை அடுத்து நிற்கும் எதுகை எழுத்து அடிப்படையைக் கையாளுகின்றனமுதலெழுத்து அடுக்கு முறை ஏட்டைப் . எதுகை எழுத்தடுக்கு முறைமை நூற்பாக்களை .பார்த்துப் பொருள் உணர்ந்துகொள்ள ஏதுவாக அமையும் .அமையும் மனை செய்து மனதில் பதிய வைத்துக் கொள்ள ஏதுவாக

**திவார நிகண்டு**

நிகண்டு எனும் பிரிவில் திவாகரம் முதலில் தோன்றிய நூலாகும் இதன் காலம் .9 ம் நூற்றாண்டு ஆகும் . இந்நூல் ஆதி திவாகரம் என்னும் நூலைத் தழுவி .திவாகரத்தை செய்தவர் திவாகர முனிவர் ஆவார் கலைச் செய்பவன் சூரியன் எதிவாகரன் என்ற சொற்களுக்கு பு .எழுதியதாக கருதப்படுகிறதுன்று பொருள் . .படைக் கலங்கள் பற்றி இவர் விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளார்

திவாகரம் 12 பிரிவுகளைக் கொண்டது

1. தெய்வப்பெயர் தொகுதி
2. மக்கட் பெயர் தொகுதி
3 .விலங்குப் பெயர் தொகுதி
4 .மரப் பெயர் தொகுதி
5. இடப் பெயர் தொகுதி
6. பல்பொருள் பெயர்த்தொகுதி

7. செயற்கைப் பெயர் தொகுதி

8. பண்புப் பெயர் தொகுதி

9. செயல் பற்றிய பெயர்த் கொகுதி

10. ஒலி பற்றிய பெயர்த் தொகுதி

11. ஒருசொல் பலபொருள் பெயர்த்தொகுதி

12.பல்பொருள் ஒரு பெயர்த்தொகுதி

பன்னிரண்டு தொகுதிகளையும் சொற்பொருள் உறவு அடிப்படையில் ஒரு பொருட் பலசொல் தொகுதி, பல பொருட் பெயர்த்தொகுதி, தொகுதிப் பெயர்த் தொகுதியாக பிரித்து பொருள் கொள்ளப்படுகின்றன.2180 நூற்பாக்களால் 9500 சொற்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளதுஇதில் பல . பொருள் தரும்384 சொற்கள் உள்ளனல சொற்கள் சங்க கால இலக்கியச் சொற்கள் மிகுதியாகவும் பிற்கா . குறைவாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளனதமிழில் இன்றுள்ள நிகண்டுகளில் இதுவே காலத்தால் . .தமிழில் ஆதி நிகண்டாக திவாகரம் திகழ்கிறது.முந்தியது

**தொலகாப்பியதில் நிகண்டுகள்**

உரியிய்லில் அருஞ்சொற்களாகத் தோன்றியவற்றுக்குப் பொருள் தருகிறார் தொல்காப்பியர்.

“வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா

வெளிப்பட வாரா உரிச்சொல் மேன”

இதில் பொருள் வெளிப்படையாகத் தெரிகின்ற சொற்களை விட்டுவிட்டு, பொருள் தெளிவற்ற அரிய சொற்களுக்கு மட்டும் பொருள் கூறுவோம் என்று குறிப்பிடுகிறார்.

மரபியலில் இளமைப்பெயர், ஆண்பாற் பெயர் , பெண்பாற் பெயர் முதலியவற்றை நிகண்டுகள் போல் தொகுத்துக்கூறி அவை தமிழ் மரபுப்படி வழங்கும் வழக்கையும் குறிப்பிடுகிறார் .

நிகண்டுக்குத் தோற்றுவாய் தொல்காப்பியச் சொல் அதிகாரத்தின் உரியியல் ஆகும் அதில் உள்ள . 100 நூற்பாக்களும் நிகண்டின் பொருளையே கூறுவன இடையியல் சிறுபகுதி ., மாரபியலிலும் காணப்படும்.

தமிழின் ஒன்பதாவது நூற்றாண்டிலேயே செய்யுள் வடிவத்தில் திவாகரரால் செய்யப்பட்டு அதைத் தழுவிப் பின்னர் இருபதாம் , இருபத்திதொன்றாம் நூற்றாண்டு வரை சுமார் இருபது நிகண்டுகள் வந்திருப்பது தமிழில் சிறப்பாகும்ச் சான்றோர் இருப்பதினாலமதிப்பு மிக்க தமிழ் .ும், மக்கள் உயிரில் தமிழ் வாழ்வதாலும் என்றும் நிகண்டுகள் வளரும் என்றும் கூறி இக்கட்டுரை நிறைவுசெய்யப்படுகிறது .

**சான்றென் விளக்கம்**

(1)தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை -தமிழ் இணைய நூலகம்

(2) அகராதி நிகண்டு- இரேவண சித்தர்

(3) சேந்தன் திவாகரம் - திவாகர முனிவர்

(4)ஆசிரியர் நிகண்டு -ஜி. சொக்கலிங்கம்